2010 ஏப்ரல் 28]

112—

கட்டட வசதி

***105806—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பது கேள்வி. அரசு ஆவன செய்து 25-09-2009-ல் ரூ.2,88,90,000/- நிதி ஒதுக்கி, டெண்டரும் விட்டு, பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், 37 ஆண்டுக் காலமாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வந்த இந்த நீதிமன்றத்திற்கு எனது கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டு 3 கோடி ரூபாய் தந்து நிறைவேற்றித் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாவட்டம் புதிய மாவட்டமாக உருவாகியிருக்கிறது. அந்த மாவட்டத்திற்குப் பல துறை அலுவலகங்கள் வருவதற்கு எங்கள் மாவட்ட அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில், ஒருங்கிணைந்த நீதிமன்றமும் வருவதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா? அதோடு அங்கே தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் மட்டும் வந்திருக்கிறது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் P.D.J. Court-ம் வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று என் சார்பிலும், எங்கள் மாவட்ட அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் சார்பிலும் வலியுறுத்திக் கேட்டு அமர்கின்றேன்.

[2010 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் கேள்விக்கு பதில். முதலில் Sub-Court, C.J.M. Court-ஆக மாறியிருக்கிறது. அடுத்த கட்டமாக மாவட்ட நீதிமன்றமும் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அடுத்த கட்டமாக விரைவில் வரும் என்ற நம்பிக்கையோடு, இன்றைக்கு ஒரு செய்தியை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். காலையிலே, 'தினத்தந்தி' பத்திரிகையிலே ஒரு செய்தி. மனுநீதிச் சோழனைக் கேள்விப்பட்டிருக்கிறோம், பத்திரிகை நீதிச் சோழனை கேள்விப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். பத்திரிகையிலே நேற்று முன்தினம் கண் பார்வை இழந்த ஒரு மாணவியைப் பற்றிச் செய்தி வந்திருக்கிறது. அதையொட்டி, நமது தளபதி, துணை முதல்வர் அவர்கள் அந்த மாணவிக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No, இந்தக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் ஏதும் கேட்காதீர்கள். அதைப் பிறகு 'Zero Hour'-இல், கேளுங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா அதியமான்.

திருமதி லதா அதியமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியிலுள்ள நீதிமன்றம், மிகவும் பழைமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்தில் இருக்கின்ற நீதிமன்றத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுதுதான் தெரிவித்து இருக்கிறார்கள். நிலைமை என்னவென்று கண்டறிந்து ஆவன செய்யப்படும்.

2010 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.*

திரு. பி. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பணி தொடங்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கி இடமும் ஒதுக்கப்பட்டிருந்தால் அந்த இடத்திற்கு உயர் நீதிமன்றம் approval தரவேண்டும். தந்திருந்தால் பொதுப் பணித் துறையினர் வேலையைத் தொடங்குவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் மையத்தை வைத்து, அது என்ன நிலையில் இருக்கிறது என்பதை விசாரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.*

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.*

திருமதி பி. பத்மாவதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலத்தில் வாடகைக் கட்டடத்தில் அதுவும் மிகவும் நெருக்கடியான இடத்தில் நீதிமன்றம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையாக நான் வலியுறுத்தி வருகிறேன். அந்த நீதிமன்றத்திற்குத் தேவையான நிலமும் தேர்வு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே புதிய நீதிமன்றத்தைக் கட்டித் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கேள்விகளுக்கு நான் பலமுறை பதில் சொல்லியாகிவிட்டது. நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த நீதிமன்றங்களை எந்தெந்த ஊர்களில் அமைக்கலாம்*

என்பதைப் பெரும்பாலும் உயர் நீதிமன்றம்தான் நிச்சயம் செய்கிறது. பழைய ஓட்டு வீடுகளில், ஒழுகுகின்ற கூரையுள்ள இடங்களில், வாடகைக் கட்டடங்களில், சந்தடியான இடங்களிலெல்லாம் நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் முன்னுரிமை தருவார்கள். எனவே, எந்தெந்த நீதிமன்றங்களுக்கு முன்னுரிமை தருவது என்பதைப் பட்டியல் போட்டு அரசுக்கு அனுப்புகிறார்கள். அந்தப் பட்டியலிலிருந்து, அரசு, நிதிநிலைமைக்கு ஏற்ப அறிவிக்கிறது. சில நேரங்களில் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியிலே ஒரு நீதிமன்றம் வேண்டுமென்று வற்புறுத்துகிறபொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அந்த ஊரையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னால், நாங்கள் அறிவித்துவிட்டு, மறுபடியும் போய் உயர் நீதிமன்றத்தினுடைய approval-ஐப் பெற வேண்டும். எனவே நன்னிலம் ஊரைப் பொறுத்தவரையில் பட்டியலில் வந்தால் நிச்சயம் அரசாங்கம் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக அரசினுடைய மாவட்ட அலுவலகங்களில், குழந்தைகளைப் பராமரிப்பதற்கான குழந்தைக் காப்பகங்கள், பெண் அரசு ஊழியர்களுக்காக ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான அரசு உத்தரவும் கடந்த காலங்களிலே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு மாவட்ட நீதிமன்ற வளாகங்களில் இளம் பெண் வழக்கறிஞர்கள் தங்கள் குழந்தைகளைக் காப்பகத்தில் விடுவதற்கான வசதி, இன்னமும் செய்யப்படவில்லை. இதுகுறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துறை வாரியாகப் பரிசீலனை செய்து, நீதிமன்றங்களில் குழந்தைக் காப்பக இணைப்புக்கு ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்களிடமிருந்து இப்போதுதான் பாலகர்களை நீதிமன்றங்களில் வைத்து எப்படிக் காப்பாற்றுவது என்பதுபற்றிக் கோரிக்கை வந்திருக்கிறது.

2010 ஏப்ரல் 28]

அந்தக் கோரிக்கை, வேறு எந்தத் திக்கிலிருந்தும் எனக்கு வரவில்லை. அப்படி ஒரு சூழ்நிலை உருவானால், அதுபற்றி அரசாங்கம் சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். பிரேமா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

பணிமனை

***106088—திருமதி ஆர். பிரேமா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அவினாசி தொகுதி, அவினாசிக்கு 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருப்பூரில் 2 பணிமனைகளும் மற்றும் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கருமத்தம்பட்டியில் ஒரு பணிமனையும் இயங்கி வருவதால், அவினாசி தொகுதி, அவினாசியில் பணிமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். பிரேமா.*

திருமதி ஆர். பிரேமா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், அவினாசியில் போக்குவரத்துப் பணிமனை இல்லாததால் பேருந்துகள் பழுது மற்றும் பராமரிப்பு ஆகிய பிற காரணங்களால் பேருந்துகள் நின்றுவிட்டால், மாற்றுப் பேருந்துகள் வருவதற்குள் கால விரயமாகிறது. பயணிகள் மன உளைச்சல் காரணமாக, மிகுந்த சிரமப்படும் சூழ்நிலை உள்ளது. ஆகவே, அவினாசி தொகுதியின் மையப் பகுதியில் பொதுமக்களின்*